இருக்கின்றன. குறிப்பாக, மதுரை மாவட்டத்திலே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை யொட்டி பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகிறார்கள். வனத் துறைக்குத் தேவையில்லாத, காடுகள் அல்லாத இம்மாதிரி யான நிலங்களை சர்வே செய்து, அவைகளை ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பற்றக் கேள்வி. என்றாலும், இதன் விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காலியாக அல்லது காடுகள் அல்லாத பகுதி களில்வசிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார்கள். நம்முடைய நிலப்பரப்பிலே மூன்றில் ஒரு பங்கு பகுதி காடாக இருக்க வேண்டுமென்பது உலக நியதி. அதை இந்திய அரசும், மாநில அரசும் ஏற்றுக்கொண்ட நியதி. ஆனால், 16 சதவீதம் தான் நாம் காடாக வைத்துக்கொண்டிருக்கிறோம். மற்றப் பகுதி களைக் காடுகளாக்க மரங்கள் வளர்க்கும் திட்டத்தை ஆண்டு தோறும் பல கோடி ரூபாய் செலவழித்து நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். ஆகவே, அப்பேர்ப்பட்ட பகுதிகளில் காடுகளாக்க மரங்களை நடும் திட்டத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, நீண்டகாலமாக அங்கே ஏழை எளிய மக்கள் விவசாயம் செய்துகொண்டு, வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்கின்ற விவரங்களைத் தனியாகக் குறிப்பிட்ட பகுதிகளைக் காட்டி, அரசாங்கத்திற்குத் தெரிவித் தால், சம்பந்தப்பட்ட இடத்தைப் பற்றித் தனியாக விவரங்கள் சேகரித்து, ஆணைகள் பிறப்பிப்பதற்கோ அல்லது மாற்று ஏற் பாடுகள் செய்வதற்கோ அரசு முயலும்.

வேடந்தாங்கல் பறவைகள் புகலிடம்.

வினா எண். 456—திரு. து. புருஷோத்தமன் : மற்றும் திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடந்தாங்கல் பறவைகள் புகலிடத்தை மேம்படுத்தி பார்வையாளர்கள் வசதிக்காக அங்கு தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 24]

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கல், பறவைகள் சரணாலயம் சுற்றுலாப் பயணிகளை கவரத்தக்க வகையில் உள்ள ஒரு முக்கிய மான கேந்திரமாகும். அந்த இடத்தில் ஒரு சுற்றுலா பயணிகள் விடுதியும், பறவைகள் சரணாலயமும் பல ஆண்டுகளாக சரியான முறையில் பராமரிக்கப்படாமல், அங்கே சுற்றுலாப் பயணிகள் வருவது குறைந்து விட்டது. அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அங்கே ஏற்கெனவே 1,73,000 செலவில் ஒரு ஓய்வு விடுதி கட்டப்பட்டுள்ளது. அங்கே வருகின்ற பார்வை யாளர்கள், குறிப்பாக வேடதாங்கலில் யாரும் ஒரு நாள் முழு வதும் அல்லது இரண்டு நாட்கள் தங்கும் நிலையில் இல்லை. போய்ப் பார்த்துவிட்டு, உடனே திரும்பி விடுகிறார்கள். சமீப காலத்தில் அங்கே பறவைகள் வருவது குறைந்திருக்கிறது என்று தகவல் தந்திருக்கிறார்கள். அதைப் பற்றி அரசு வனத் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மேலும் அங்கே மரங்களும், தண்ணீரும் எப்போதும் இருப்பதற்கு ஏற்றவகையில், அப்படிப் பட்ட முயற்சியை வனத்துறை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேடதாங்கல் பறவைகள் சரணாலயத்தில், இந்தப் பறவைகள் தங்கும் சீசனில் அந்தப் பறவைகளைப் பார்ப்பதற்கு குழந்தை கள் மிகவும் ஆவலாக இருக்கிறார்கள். ஆனால், போக்குவரத் திற்கு அதிகமாகச் செலவாகின்ற காரணத்தினால், சுற்றுலாத் துறை மூலம் குறைந்த செலவில் போய்ப் பார்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோ சனையை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர் களோடு கலந்து, அவ்வாறு ஏற்பாடு செய்ய இயலுமா என்பதைப் பற்றி சுற்றுலாத் துறை பரிசீலிக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் போன்று தமிழ் நாட்டில் வேறு இடங்களில் பறவைகள் சரணா லயம் இருக்கின்றதா? இந்தப் பறவைகள் அங்கே இயற்கை யாகவே வருகின்றனவா ? அல்லது செயற்கையாக வரவழைக்கப் படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கல் போன்ற மிகப் புகழ்பெற்ற மிகப் பெரிய பறவைகள் சரணாலயம் தஞ்சாவூர் மாவட்டத்திலே கோடிக்கரையிலே உள்ளது. உலகத்தின் பல்வேறு பாகங்களிலே இருந்து, பல ஆயிரக்கனக்கான மைல்களிலே இருந்து பறவைகள் ஒவ்வொரு காலங்களிலும், ஒவ்வொரு இடங்களுக்கும் வருவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கின்றன. அவைகள் இயற்கையாக வருகின்றனவே தவிர, யாரும் செயற்கையாக அந்தப் பறவைகளை அழைத்து வருவதில்லை.

தூத்துக்குடி சிவன் கோவில் திருப்பணி.

* வினா எண் 457 — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி, சிவன் கோவில் தெருவில் உள்ள அருள்மிகு சிவன் கோவில் திருப்பணி செய்யும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி, அருள்மிகு சிவன் கோயிலில் உடனடியாக திருப்பணி செய்ய வேண்டிய திருப்பணி வேலைகள் இல்லையாதலால், தற்போது திருப்பணி செய்யும் திட்டம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது முன்னோர்கள் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொன்னார்கள். ஒவ்வொரு ஊரிலும் மூன்று கோயில்கள், நான்கு கோயில்கள் என்று இருக்கின்றன. இவைகள் மிகவும் பழமையான கோயில்கள். திருப்பணி செய்யப்படாமல் இருக்கின்றன. சில இடங்களில் திருப்பணி வேலை பாதியிலேயே நிற்கிறது. இதை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. திருப்பணிக்காக இந்த அரசு பதவிக்கு வந்த பிறகு எவ்வளவு ரூபாய் தமிழ்நாடு முழுவதற்கும் ஒதுக்கியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி, சிவன் கோயிலைப் பற்றிய கேள்வி இது. தமிழகத்தைப் பற்றிய மொத்த விவரமும் அறிய விரும்புகிறேன். தனி கேள்வி போட்டால் எல்லா விவரங்களையும் சேகரித்துத் தர வசதியாக இருக்கும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS